தமிழ் மொழி

இறுதியாண்டுத் தேர்வு வகுப்பு 03 08-12-2007

பன்முகதேர்வு வினாக்கள் **Section A** வருடம்: 03

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அவளுடைய என்றால்.<br>1. his 2. her 3. him 4. she | 1 | 2 | 3 | 4 |
| 2. | ராதா கோயிலுக்குப் போனாள். இதில் பயனிலை ----------.<br>1. போனேன் 2. போகிறார்கள். 3.போகிறோம். 4. போனாள். | 1 | 2 | 3 | 4 |
| 3. | நூற்றாண்டு என்பது<br>1. year 2. decade 3. century 4. millennium | 1 | 2 | 3 | 4 |
| 4. | பழம் கனிந்தது. பழங்கள் ------<br>1. கனிந்த 2. கனிந்தனர் 3. கனிந்தன 4. கனிந்தது | 1 | 2 | 3 | 4 |
| 5. | எழுபத்தியாறு என்றால்.<br>1. 07 2. 706 3. 76 4. 7006 | 1 | 2 | 3 | 4 |
| 6. | வெறுப்பு எதிர்ச்சொல் --------------.<br>1. விருப்பு 2. பிரிவு 3. ஆசை 4. தனிமை | 1 | 2 | 3 | 4 |
| 7. | அரசனின் எதிர்ப்பால் சொல் ---------------.<br>1. தங்கை 2. அம்மா 3. அரசி 4. நடிகை | 1 | 2 | 3 | 4 |
| 8. | சிறுவன் பாட்டுப் பாடுகிறான். நான் பாட்டுப்<br>1. பாடினான். 2. பாடுகிறோம். 3. பாடுவான் 4. பாடுகிறேன். | 1 | 2 | 3 | 4 |
| 9. | கல்-சிலை சேர்த்து எழுதினால்<br>1. கற்றிலை 2. கல்சிலை 3. கற்சிலை 4. கச்சிலை | 1 | 2 | 3 | 4 |
| 10. | நாய் பூனையை பின்னால் துரத்தியது இதில் எழுவாய்<br>1. பூனையை 2. துரத்தியது 3. பின்னால் 4. நாய் | 1 | 2 | 3 | 4 |
| 11. | இக்கரை மாட்டுக்கு அக்கரை ------.<br>1. வெள்ளை 2. பச்சை 3. நீலம் 4. சிவப்பு | 1 | 2 | 3 | 4 |
| 12. | ஆடு தோட்டத்தில் மேய்ந்து கொண்டு -----------<br>1. படுத்தன 2. திரிந்தது 3. ஆடியது 4. திரிந்தன | 1 | 2 | 3 | 4 |
| 13. | ஓரு மரம். இரண்டு ----- .<br>1. மரம்கள் 2. மறங்கள் 3. மரன்கள் 4. மரங்கள் | 1 | 2 | 3 | 4 |
| 14. | முதுமை என்பதன் எதிர்ச்சொல்<br>1. மறைவு 2. இளமை 3. இறப்பு 4.தோன்று | 1 | 2 | 3 | 4 |
| 15. | நூறு என்பது.<br>1.one hundred 2. fifty 3. eighty 4. two hundred | 1 | 2 | 3 | 4 |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16. | ------------- கதைப் புத்தகம் படிக்கிறேன்.<br>1. நாங்கள் 2. நான் 3. நாம் 4. அவர்கள் | 1 | 2 | 3 | 4 |
| 17. | ஆடவர் என்பது --------<br>1. பெண்கள் 2. ஆண்கள் 3. சிறுவர். 4. கிழவர். | 1 | 2 | 3 | 4 |
| 18. | பன்னிரண்டாவது மாதம் ----------<br>1. தை 2. சித்திரை 3. மார்கழி 4. ஆனி | 1 | 2 | 3 | 4 |
| 19. | தலைவனின் எதிர்ப்பால் சொல்<br>1. தலைவி 2. சிறுமி 3. மாணவி 4. பாட்டி | 1 | 2 | 3 | 4 |
| 20. | இறுதியில் என்றால்<br>1. தொடக்கத்தில் 2. முடிவில் 3. ஆரம்பத்தில் 4. இடையில் | 1 | 2 | 3 | 4 |
| 21. | ஆடி மாதத்தின் பின் வரும் மாதம் ------------- ஆகும்.<br>1. தை 2. சித்திரை 3. ஆவணி 4. மார்கழி | 1 | 2 | 3 | 4 |
| 22. | நாம் ஒவ்வொருநாளும் தெய்வம் --------------- வேண்டும்.<br>1. படிக்க 2. தொழ, 3. நட 4. ஓட | 1 | 2 | 3 | 4 |
| 23. | அவன் அவர்களது வீட்டில் --------<br>1. தங்கினார். 2. தங்கினாள். 3. தங்கின 4. தங்கினான். | 1 | 2 | 3 | 4 |
| 24. | சிற்றலை பிரித்து எழுதினால்<br>1. சின் - அலை 2. சிறிய - அலை 3. நற் - அலை 4. சி - அலை | 1 | 2 | 3 | 4 |
| 25. | ஆசிரியரால் அவன் ------------ பட்டான்<br>1. பாராட்டப் 2. இகழப் 3. பேசப் 4. அடி | 1 | 2 | 3 | 4 |
| 26. | நன்றாகப் படித்தால் எமக்கு --------- கிடைக்கும்<br>1. படம் 2. தட்டம் 3. வட்டம் 4. பட்டம் | 1 | 2 | 3 | 4 |
| 27. | பின்வருவனவற்றுள் ஆண்டவனுக்கு பொருத்தமில்லாத சொல்<br>1. சாமி 2. இறைவன் 3. பறவை 4. தெய்வம் | 1 | 2 | 3 | 4 |
| 28. | இயற்கை என்பதன் எதிர்ச்சொல் ---------------.<br>1. உண்மை 2. செயற்கை 3. மகிழ்ச்சி 4. துன்பம் | 1 | 2 | 3 | 4 |
| 29. | கல்லூரி அதிபர் என்பது.<br>1. teacher 2. clerk 3. principal 4. student | 1 | 2 | 3 | 4 |
| 30. | தண்ணீர் ---------- என்று ஓடியது<br>1. மளமள 2. சலசல 3. கடகட 4. கலகல | 1 | 2 | 3 | 4 |

( 30 புள்ளிகள்)

வினாக்கள் **Section B** வருடம்: 03

1.பின்வரும் பந்தியை வாசித்து கேள்விகளுக்குப் பதில் எழுதுக.

மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வரும் பாடல்களே நாட்டுப்பாடல்கள் ஆகும். இவை பலராலும் பாடப்பட்டு வருபவை. இவை மக்களின் வாழ்க்கை பற்றியவை. அவர்களுடைய இன்பங்கள், துன்பங்கள் பற்றியவை. மக்களின் எளிய வாழ்க்கை முறைகளைக் காட்டுபவை. மக்கள் சேர்ந்து கூட்டமாக தொழில் செய்யும்போது சில குழுப்பாடல்களை பாடுவார்கள். 'ஏலை ஏலொ ஏலையோ-----' என்று பாடப்படுவது கப்பல் பாட்டாகும். இதுவும் நாட்டுப்பாடல் ஆகும். தாய்மார்கள் குழந்தைகளைத் தாலாட்டிப் பாடுவது தாலாட்டு. தாய் குழந்தையைத் தொட்டிலில் போட்டு தொட்டிலை ஆட்டியபடி பாடுவது. இதுவும் நாட்டுப்பாடல் ஆகும்.

எப்பாடல்களை நாட்டுப்பாடல்கள் என்பர்?

______________________________

நாட்டுப்பாடல்கள் எதைப் பற்றியது?

______________________________

மக்களின் எப்படியான வாழ்க்கையைக் காட்டுகிறது இப்பாடல்கள்?

______________________________

குழந்தையை தொட்டிலில் போட்டு பாடப்படுவது எது?

______________________________

மக்கள் கூட்டமாக தொழில் செய்யும்போது பாடப்படுவது என்ன?

______________________________

(10 புள்ளிகள்)

2. சரியான சொற்களைத் தெரிவு செய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

(தை, ஆடி, மார்கழி, கார்த்திகை, ஞாயிறு )

நத்தார் பண்டிகை வரும் மாதம் எது? ____________

வாரத்தின் விடுமுறை நாள் எது? ________________

பொங்கல் திருநாள் வரும் மாதம் எது? ________________

____________ பிறப்புக்கு நாளை விடுதலை நல்ல கூழும் குடிக்கலாம்.

கார்த்திகை தீபம் ஏற்றும் மாதம் ______________

(10 புள்ளிகள்)

3. தொலைக்காட்சியில் உமக்கு பிடித்த ஒரு நிகழ்ச்சி பற்றி 5 வசனங்கள் எழுதுக.

(10 புள்ளிகள்)

4. பின்வரும் எடுத்துக்காட்டை பார்த்து வாக்கியங்களை மாற்றி அவற்றைக் கருத்துக்கமைய எழுதுக.

உ.ம்: நான் (அவன்) அவனுடன் சேர்ந்து விளையாடினேன்.

நாங்கள் (இவர்) பாடம் படிக்கிறோம். ______

நீ நேற்று பாடசாலைக்கு (பேரூந்து) போனாயா?. ______

அவள் (அவர்கள்) கடைக்கு சென்றாள். ______

அவன் (என்) புத்தகம் வாசித்தான். ______

அவன் ((ஆசிரியர்) உடற்பயிற்சி செய்தான். ______

(10 புள்ளிகள்)

5. பெரியவர் ஒருவர் வந்து தொடரூந்து நிலையம் (**railway station**) எங்கிருக்கிறது என்று போகும் வழியைக் கேட்டால் அவருக்கு எவ்வாறு பதில் கூறுவீர்?

(10 புள்ளிகள்)

6. பின்வரும் சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக

(யாரை, எங்கே, எப்போது, என்ன, தெரியுமா)

நீ இங்கே ________ப் பார்க்க வந்தாய்?

இராகவன் __________ ஊருக்குச் செல்வான்?

உனக்கு தமிழ் வாசிக்கத் __________?

காலை எழுந்ததும் ____________ செய்ய வேண்டும்?

அவர்கள் வீடு ________________ இருக்கிறது?

(10 புள்ளிகள்)

7. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்கு செய்து வாக்கியமாக எழுதுக.

இராமன் - கொண்டாடினான் - பிறந்தநாள் - நேற்று

_______________________________________________________

சென்றார்கள் - சுற்றுலாவிற்கு - அவர்கள் - கனடாவிற்குச்

_______________________________________________________

பறவை - சென்றது - மேலே - பறந்து

_______________________________________________________

இருக்கின்றார் - சிட்னியில் - சித்தப்பா - என்

_______________________________________________________

உதிக்கும் - காலையில் - சூரியன் - அதி

_______________________________________________________

பாடுவோம் - தேவாரம் - நாங்கள் - கோயிலில்

_______________________________________________________

தாய் - மொழி - எங்கள் - தமிழ்.

_______________________________________________________

பார்த்தார்கள் - அவர்கள் - போய் - நடந்து

_______________________________________________________

மகிழ்ச்சியால் - குதித்தாள் - சிறுமி - துள்ளி

_______________________________________________________

சிறந்த - புலவர் - பாரதியார் - ஒரு

_______________________________________________________

(10 புள்ளிகள்)